RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-4 | இதழ்-67 | 12 மார்ச் | புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் பரவலாக மழை

சென்னை , மார்ச்.12



தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களிலும் நேற்று (மார்ச் 11) காலை தொட்டே பரவலாக லேசானது முதல் மிதமான மழை பெய்து வருகிறது. இதனால் வெப்பம் சற்றே தணிந்துள்ளது.

டெல்டா மாவட்டங்கள் உள்ளிட்ட 12 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் கடந்த சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தது. அதன்படி பரவலாக மழை பெய்து வருகிறது. சென்னையிலும் புறநகர்ப் பகுதிகளில் மழை பெய்து வருகிறது.

இந்நிலையில் தமிழகத்தின் பல்வேறு பகுதியில் இன்றும் (மார்ச் 12) பரவலாக மழைப் பொழிவு இருக்கும் என கணிக்கப் பட்டுள்ளது. டெல்டா மாவட்டங்கள் மற்றும் தென் தமிழகத்தில் கனமழை பதிவாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னை, செங்கல்பட்டு மாவட்டங்கள் மற்றும் வேலூரில் திடீர் மழைப் பொழிவு இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி, திருநெல்வேலி, ராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், புதுக்கோட்டை, தேனி, மதுரை, தஞ்சாவூர், திருவாரூர், நாகை ஆகிய மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கோவை மற்றும் அதை ஒட்டியுள்ள உட்புற மாவட்டங்களிலும் மிதமான மழை இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் இந்த மழையால் வெப்பம் சற்று குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இருப்பினும் இந்த இரு தினங்களுக்குப் பின்னர் மீண்டும் வெப்பநிலை படிப்படியாக அதிகரிக்கும் என்றும் கணிக்கப் படுகிறது.

## தமிழக மக்களை அவமானப்படுத்துகிறீர்கள்! தர்மேந்திர பிரதானுக்கு முதல்வர் ஸ்டாலின் எச்சரிக்கை

சென்னை, மார்ச்.12



மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கு நாவடக்கம் வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் எச்சரித்துள்ளார்.

நாடாளுமன்ற மக்களவையில், பட்ஜெட் மீதான விவாதத்தின்போது, மத்திய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் பேசும்போது, திமுக எம்.பி.க்களை ஜனநாயகம் இல்லாதவர்கள், அநாகரீகமானவர்கள், மாணவர்கள் நலனில் அக்கறை இல்லாதவர்கள். தமிழக மக்களிடம் நேர்மையாக இல்லை என்றும் பேசினார். இதுதவிர, கடந்தாண்டு முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு எழுதிய கடிதம் மற்றும் கனிமொழி எம்.பி.யுடனான சந்திப்பு தொடர்பாகவும் கருத்து தெரிவித்திருந்தார்.

மத்திய அமைச்சரின் இந்த பேச்சுக்கு கண்டனக்குரல்கள் எழுந்துள்ளன. தர்மேந்திர பிரதான் பேச்சை கண்டித்து வெளிநடப்பு செய்த திமுக எம்.பி.க்கள், பிரதானுக்கு எதிராக நாடாளுமன்ற வளாகத்தில் போராட்டம் நடத்தினர்.

இந்நிலையில், மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் கடந்தாண்டு ஆகஸ்ட் 30ம் தேதி தனக்கு எழுதிய கடிதத்தை பதிவிட்டு முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட சமூக வலைதளப்பதிவில் கூறியிருப்பதாவது: தன்னை மன்னரென எண்ணிக் கொண்டு ஆணவத்துடன் பேசும் மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கு நாவடக்கம் வேண்டும். தமிழகத்தின் நிதியைத் தராமல் ஏமாற்றும் நீங்கள் தமிழக எம்.பி.க்களைப் பார்த்து அநாகரிகமானவர்கள் என்பதா. தமிழக மக்களை அவமானப்படுத்துகிறீர்கள். பிரதமர் நரேந்திர மோடி இதனை ஏற்கிறாரா, தேசிய கல்விக் கொள்கை, மும்மொழிக் கொள்கையைத் தமிழக அரசு அனுப்பிய பிஎம் ஸ்ரீ புரிந்துணர்வு ஒப்பந்தம் முற்றிலுமாக நிராகரித்து விட்டது என எனக்குக் கடிதம் எழுதியது நீங்கள் தானே?

பிரதான் அவர்களே, நாங்கள் மக்களின் எண்ணங்களுக்கு மட்டுமே மதிப்பளித்துச் செயல்படுகிறோம். உங்களைப் போல நாக்பூரின் சொற்களுக்குக் கட்டுப்பட்டு அல்ல. நாங்கள் உங்கள் திட்டத்தைச் செயல்படுத்த முன்வரவும் இல்லை, அப்படி முன்வராத என்னை யாரும் வற்புறுத்தவும் முடியாது. தமிழக மாணவர்களுக்குரிய நிதியை, எங்களிடம் இருந்து வசூல் செய்த வரியை விடுவிக்க முடியுமா முடியாதா என்பதற்கு மட்டும் பதில் கூறுங்கள். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## ரன்யா ராவ் தங்கக் கடத்தல் வழக்கு: மேலும் ஒருவர் கைது விசாரணை வளையத்தில் ஐபிஎஸ் தந்தை

பெங்களூரு, மார்ச்.12



நடிகை ரன்யா ராவ் துபாயில் இருந்து இந்தியாவுக்கு தங்கம் கடத்தி வந்த விவகாரத்தில் தருண் ராஜு என்பவரை கைது செய்துள்ளனர் வருவாய் புலனாய்வு இயக்குநரக அதிகாரிகள். அவருக்கு இந்த விவகாரத்தில் தொடர்பு இருப்பதாக தகவல். அவர் பிரபல ஹோட்டல் அதிபரின் பேரன் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் ரன்யா ராவ் போலீஸ் டிஜிபி ராமசந்திர ராவின் வளர்ப்பு மகள் என்பதால், விமான நிலையத்தில் ஏதேனும் விதிமுறை மீறல் நடந்ததா என்பதை விசாரிக்க கர்நாடக அரசு உத்தரவிட்டுள்ளது.

அவரை நீதிபதி முன் ஆஜர்படுத்திய நிலையில், 5 நாட்களில் அவரை காவலில் வைத்து விசாரிக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. முன்னதாக, இந்த வழக்கில் தருணுக்கு தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. வெளிநாடுகளில் இருந்து தங்கம் கடத்தி வர ரன்யா ராவுக்கு தருண் ராஜு உதவி உள்ளார் என தகவல்.

குறிப்பாக துபாயில் இருவரும் ஒன்றாக இருந்துள்ளனர். அப்போது ரன்யா ராவிடம் தங்கத்தை வாங்கி கொடுத்தது அவர்தான் என்ற சந்தேகமும் எழுந்துள்ளது. அது குறித்து தான் தற்போது விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. அவரும் நடிகை ரன்யா ராவும் நெருங்கிய நண்பர்கள். அதனால் தான் அவர் மீது தற்போது விசாரணை அதிகாரிகளுக்கு சந்தேகம் வலுத்துள்ளது.


விமான நிலையத்தில் விதிமுறை மீறல்: தங்கக் கடத்தல் வழக்கில் சிக்கியுள்ள நடிகை ரன்யா ராவ், கர்நாடக போலீஸ் டிஜிபி ராமசந்திர ராவின் வளர்ப்பு மகள் ஆவார். அதனால் பெங்களூரு சர்வதேச விமான நிலையத்தில் ஏதேனும் விதிமுறை மீறல் நடந்துள்ளதா என்பதை விசாரிக்க தொடங்கி உள்ளது கர்நாடக அரசு.

அப்படி ஏதேனும் இருந்தால் அதில் போலீஸ் டிஜிபி ராமசந்திர ராவுக்கு தொடர்பு உள்ளதா என்பதை இந்த விசாரணை மூலம் உறுதி ஆகும் என கர்நாடக அரசு நம்புகிறது. விமான நிலையத்தில் பாதுகாப்பு குறைபாடு மற்றும் காவல்துறையினரின் ஈடுபாட்டை கண்டறிய இரண்டு தனித்தனி விசாரணைக்கு அம்மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

பின்னணி என்ன? கர்நாடக மாநிலத்தை சேர்ந்த நடிகை ரன்யா ராவ் (32) தமிழில் நடிகர் விக்ரம் பிரபு நடித்த 'வாகா' திரைப்படத்தில் அவருக்கு ஜோடியாக நடித்துள்ளார். கர்நாடக போலீஸ் டிஜிபி ராமசந்திர ராவின் வளர்ப்பு மகளான இவர், கடந்த 3ம் தேதி துபாயில் இருந்து பெங்களூருவுக்கு வந்த போது, 14.8 கிலோ தங்கம் கடத்தி வந்ததாக வருவாய் புலனாய்வு இயக்குநரக அதிகாரிகள் கைது செய்யப்பட்டார்.

## பிஹாரில் வாடிக்கையாளர்போல நுழைந்து நகைக்கடையில் ரூ.25 கோடி நகை கொள்ளை

பாட்னா, மார்ச்.12



பிஹாரின் அர்ரா நகரில் உள்ள நகைக்கடையில் நேற்று ரூ.25 கோடி மதிப்புள்ள நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன. இதில் தொடர்புடைய 2 பேர் கைது செய்யப்பட்டனர். 4 பேரை போலீஸார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

பிஹாரின் போஜ்பூர் மாவட்டம், அர்ரா நகரில் பிரபல நகைக்கடை செயல்படுகிறது. இந்த நகைக்கடை நேற்று காலை 10 மணிக்கு திறக்கப்பட்டது. காலை 10.15 மணிக்கு கடையை தூய்மைப்படுத்தும் பணி நடை பெற்றது. அப்போது 2 மர்ம நபர்கள் கடைக்கு வந்தனர். வாயிலில் நின்றிருந்த காவலர்களிடம், மர்ம நபர்கள் துப்பாக்கியை காட்டி மிரட்டி அவர்களிடம் இருந்த துப்பாக்கிகளை பறித்து கொண்டனர். பின்னர் 2 மர்ம நபர்களும் கடைக்குள் நுழைந்தனர். அந்த நேரத்தில் மேலும் 4 மர்ம நபர்கள் நகைக் கடைக்குள் வந்தனர். அனைவரின் கைகளிலும் கைத்துப்பாக்கிகள் இருந்தன.

நகைக்கடையின் ஷட்டர்களை மூடிய மர்ம நபர்கள், கடையின் ஊழியர்களிடம் இருந்து செல்போன்களை பறித்தனர். பின்னர் அவர்களை தனி அறையில் வைத்து பூட்டினர். சுமார் 22 நிமிடங்கள் கடையின் இரு தளங்களில் இருந்த நகைகளை பெரிய பைகளில் நிரப்பிக் கொண்டு காலை 10.50 மணிக்கு அங்கிருந்து தப்பியோடிவிட்டனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு போலீஸார் விரைந்து வந்தனர். நகைக்கடையை கொள்ளையடித்த 6 மர்ம நபர்களும் முகமூடி அணியவில்லை. அவர்களின் முகங்கள் சிசிடிவி கேமராவில் தெளிவாக பதிவாகி இருந்தன. சிசிடிவியில் பதிவான கொள்ளையர்களின் புகைப்படங்கள், வீடியோ அனைத்து காவல் நிலையங்களுக்கும் அனுப்பப்பட்டன.

இந்த சூழலில் பிஹாரின் பதாரா போலீஸ் நிலைய எல்லைப் பகுதியில் 3 மோட்டார் சைக்கிள்களில் 6 பேர் தப்பிச் செல்வது குறித்து போலீஸாருக்கு தகவல் கிடைத்தது. அவர்களை போலீஸார், வாகனங்களில் விரட்டி சென்றனர். அப்போது போலீஸாரை நோக்கி மர்ம நபர்கள் துப்பாக்கியால் சுட்டனர். பதிலுக்கு போலீஸாரும் துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

இதில் 2 பேர் காயமடைந்து மோட்டார் சைக்கிளில் இருந்து கீழே விழுந்தனர். இருவரும் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து 2 பைகள் கைப்பற்றப்பட்டன. அவற்றில் இருந்து ஏராளமான தங்க நகைகள் மீட்கப்பட்டன. தப்பியோடிய 4 பேரை போலீஸார் அதிதீவிரமாக தேடி வருகின்றனர்.

இதுகுறித்து போஜ்பூர் மாவட்ட எஸ்பி ராஜ் கூறியதாவது: நகைக்கடை கொள்ளை தொடர்பாக சரண் மாவட்டம் திக்வாரா பகுதியை சேர்ந்த விஷால் குப்தா, சோன்பூர் பகுதியை சேர்ந்த குணால் குமார் ஆகிய 2 பேரை கைது செய்துள்ளோம். போலீஸார் சுட்டதில் இருவருக்கும் காலில் குண்டு காயம் ஏற்பட்டிருக்கிறது. அவர்களிடம் இருந்து 2 துப்பாக்கிகள், 10 துப்பாக்கி குண்டுகள் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளன. நகைக்கடையில் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட நகைகளும் மீட்கப்பட்டு உள்ளன. தப்பியோடிய 4 பேரை தீவீரமாக தேடி வருகிறோம். அவர்களை பிடிக்க சிறப்புப் படை அமைக்கப்பட்டு உள்ளது. இவ்வாறு மாவட்ட எஸ்பி ராஜ் தெரிவித்துள்ளார்.

நகைக்கடை மேலாளர் குமார் கூறியதாவது: எங்களது கடையில் ரூ.50 கோடி மதிப்புள்ள நகைகள் இருந்தன. இதில் சுமார் ரூ.25 கோடி மதிப்புள்ள நகைகளை மர்ம நபர்கள் கொள்ளையடித்து சென்றுள்ளனர். 2 பேர் கைது செய்யப்பட்டு 2 பைகளில் நகைகள் மீட்கப்பட்டு இருப்பதாக போலீஸார் தெரிவித்துள்ளனர். எவ்வளவு நகைகள் மீட்கப்பட்டிருக்கிறது என்பது குறித்து முழுமையாக தெரியவில்லை.

நகைக்கடை என்பதால் சில பாதுகாப்பு நடைமுறைகளை நாங்கள் கடைப்பிடித்து வருகிறோம். ஒரே நேரத்தில் 4 பேரை கடைக்குள் அனுமதிப்பது கிடையாது. இதை கொள்ளையர்கள் முன்கூட்டியே அறிந்து வைத்துள்ளனர். முதலில் சாதாரண வாடிக்கையாளர் போன்று 2 பேர் மட்டுமே கடைக்குள் நுழைந்து உள்ளனர். திடீரென மேலும் 4 பேர் கடைக்குள் நுழைந்து நகைகளை கொள்ளையடித்து சென்று விட்டனர். இவ்வாறு கடை மேலாளர் குமார் தெரிவித்தார்.

நகைக்கடை பெண் ஊழியர் சிம்ரன் கூறும்போது, "கொள்ளையர்கள் எங்களது செல்போனை பறித்துக் கொண்டனர். எங்களது நெற்றியில் துப்பாக்கியை வைத்து மிரட்டினர். 6 கொள்ளையர்கள் மட்டுமே கடைக்குள் இருந்தனர். ஆனால் அவரது கூட்டாளிகள் வெளியேயும் மறைந்து இருந்திருக்கலாம் என்று சந்தேகிக்கிறேன். போலீஸார் காலதாமதமாகவே கடைக்கு வந்தனர்" என்று தெரிவித்தார்.

## ஹைதராபாத்: குழந்தைகளைக் கொன்று தம்பதி தற்கொலை; போலீஸ் விசாரணை

ஹைதராபாத், மார்ச்.12

ஹைதராபாத்தின் ஹெப்சிகுடாவில் நிதிப்பிரச்சினை மற்றும் உடல்நிலை பாதிப்புக் காரணமாக 40 வயது கணவன் மற்றும் 35 வயது மனைவி தற்கொலை செய்து கொண்டதாகவும், முன்னதாக தங்களின் இரண்டு குழந்தைகளை தம்பதி கொலை செய்துள்ளனர் என்றும் போலீஸார் தெரிவித்தனர்.

கணவன் மனைவி இருவரது உடல்களும் தனித்தனி அறைகளிலும், அவர்களின் மைனர் குழந்தைகளின் உடல்கள் உயிரற்ற நிலையில் படுக்கை அறையிலும் காணப்பட்டது. இது குறித்து உஸ்மானியா பல்கலை. காவல் நிலைய ஆய்வாளர், என். ராஜேந்திரன் கூறுகையில், "சம்பவம் ஹிப்சிகுடா பகுதியில் உள்ள ரவிந்திராநகர் காலனியில் உள்ள பாதிக்கப்பட்டவர்களின் வீட்டில் இரவு 9.30 மணியளவில் நடந்துள்ளது. அருகில் இருப்பவர்கள் கொடுத்த தகவலின்படி, நாங்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று விசாரணையைத் தொடங்கினோம்.

முதல்கட்ட விசாரணையில், தம்பதி தற்கொலை செய்துகொள்வதற்கு முன்பு தங்களின் குழந்தைகளின் கழுத்தை நெரித்து கொலை செய்துள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

இந்தக் குடும்பத்தினர், மெஹபூப்நகர் மாவட்டம், கல்வகுர்த்தி தாலுகா, முகுரலல்லா கிராமத்தில் இருந்து ஒரு வருடத்துக்கு முன்புதான் ஹப்சிகுடாவுக்கு குடிபெயர்ந்துள்ளனர். அந்த ஆண் முன்பு தனியார் கல்லூரி ஒன்றில் விரிவுரையாளராக பணிபுரிந்துள்ளார். என்றாலும் கடந்த ஆறு மாதங்களாக வேலை இல்லாமல் இருந்துள்ளார். நீண்ட காலம் வேலை இல்லாமல் இருந்தது அந்த குடும்பத்தினை கடும் நிதி நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. இது தற்கொலைக்கு வழிவகுத்திருக்கலாம்." என்று தெரிவித்தார்.



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே இயங்கும் கல்குறிச்சி அரசு உயர்நிலைப் பள்ளியில் இரண்டு ஆசிரியர்களை பணியிடை நீக்கம் செய்து மாவட்ட கல்வி அதிகாரி நேற்று (மார்ச் .11) உத்தரவு பிறப்பித்துள்ளார். கல்குறிச்சி உயர்நிலை பள்ளி ஆசிரியர்கள் ராஜா மற்றும் சாத்தையா ஆகியோரை பணியிடம் நீக்கம் செய்யப்பட்டனர் பல்வேறு புகார்கள் இரு ஆசிரியர்களிடம் இருந்த நிலையில் அதிகாரிகள் தொடர் விசாரணைக்கு பின் நடவடிக்கை பாய்ந்துள்ளது

## தர்மேந்திர பிரதானுக்கு எதிர்ப்பு: நாடாளுமன்ற வளாகத்தில் திமுக கூட்டணி எம்.பி.க்கள் போராட்டம்

புதுடெல்லி, மார்ச்.12




மத்தியக் கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானைக் கண்டித்து நாடாளுமன்ற வளாகத்தில் திமுக மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளின் எம்.பி.க்கள் கருப்பு ஆடை அணிந்து வந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தர்மேந்திர பிரதான் பேசும்போது, 'ஜனநாயகத்துக்கு விரோதமானவர்கள், அநாகரிகமானவர்கள்' ஆகிய வார்த்தைகளை பயன்படுத்தினார். இதற்கு திமுக எம்.பி.க்கள் கடும் ஆட்சேபம் தெரிவித்தனர். திமுக எம்.பி. கனிமொழி பேசும்போது, "எங்கள் கவுரவத்தை அமைச்சர் இழிவுபடுத்தி உள்ளார். நாங்கள் அநாகரிகமானவர்கள் என்று விமர்சித்துள்ளார். இதை ஒருபோதும் ஏற்கமுடியாது" என்றார். இந்த விவகாரம் தொடர்பாக அமைச்சர் தர்மேந்திர பிரதான் மீது கனிமொழி உரிமை மீறல் நோட்டீஸும் வழங்கினார்.

இதையடுத்து, அமைச்சர் தர்மேந்திர பிரதான் பேசும்போது, "தமிழக அரசை, தமிழக எம்.பி.க்களை, தமிழக மக்களை அநாகரிகமானவர்கள் என்று நான் கூறியதாக கனிமொழி குற்றம்சாட்டுகிறார். நான் அவ்வாறு கூறவில்லை. எனினும், அந்த வார்த்தைகளை திரும்ப பெற்றுக் கொள்கிறேன்" என்றார். இதைத் தொடர்ந்து, அமைச்சர் தர்மேந்திர பிரதான் குறிப்பிட்ட வார்த்தைகள் அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுவதாக மக்களவை தலைவர் ஓம் பிர்லா அறிவித்தார்.

இதன்பிறகும், தமிழக எம்.பி.க்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டனர். அவைத் தலைவரின் இருக்கையை முற்றுகையிட்டனர். அப்போது, திமுக எம்.பி. தயாநிதி மாறன், அவை மாண்பை மீறியதாக அவைத் தலைவர் ஓம் பிர்லா குற்றம்சாட்டினார். திமுக எம்.பி.க்களின் தொடர் அமளியால் மக்களவை ஒத்திவைக்கப்பட்டது.

கருப்பு ஆடை, கண்டன வாக்கியம்.. இந்நிலையில், மத்தியக் கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானைக் கண்டித்து நாடாளுமன்ற வளாகத்தில் திமுக மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளின் எம்.பி.க்கள் கருப்பு ஆடை அணிந்து வந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். தர்மேந்திர பிரதானுக்கு நாவடக்கம் தேவை என்பதை உணர்த்தும் வாசகங்கள் அடங்கிய பதாகைகள் ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில் திமுக எம்.பி.க்கள் கனிமொழி உள்ளிட்டோர், மதிமுக எம்.பி. வைகோ, விசிக எம்.பி. திருமாவளவன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## கொக்கி பின்னல் மூலம் ஒரு லட்சத்து 500 SQUARES காட்சிப்படுத்தி 6வது முறையாக கின்னஸ் சாதனை படைத்த பெண்கள்



காட்டாங்குளத்தூர் மார்ச்.12

சென்னை காட்டாங்குளத்தூரில் உள்ள எஸ்.ஆர்.எம். கல்லூரியில் Mother India's crochet queens (எம்.ஐ.சி.கியு) 6வது உலகசாதனை நிகழ்ச்சி நடைப்பெற்றது.

CROCHET எனப்படும் கொக்கி பின்னல் மூலம் 6வயது முதல் 90 வயதில் 1000க்கும் மேற்பட்ட பெண்கள் குழந்தை, முதியோர்கள் என ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட GRANNYSQUARESகளை பின்னி உலக சாதனை படைத்தனர்.

ஒரு லட்சத்து 581 SQUARES களை கொண்டு ராணுவ வீரர்களுக்கு சல்யூட் என்ற வாசகத்தை உருவாக்கி பிரண்டமாக காட்சி படுத்தினர்.

இதனை கின்னஸ் உலக சாதனை நிறுவனம் புதிய உலக சாதனையாக அங்கீகரித்து Mother India's crochet queens அமைப்பின் நிறுவனர் சுபஸ்ரீ நடராஜனுக்கு கின்னஸ் உலகசாதனை வருது வழங்கி கவுரவித்தனர்.

உலகசாதனைக்காக உருவாக்கப்பட்ட ஒரு லட்சம் GRANNY SQUARES களை இந்திய ராணுவ வீரர்களை கவுரவிக்கும் வகையில் ராணுவ வீரர்களுக்கு பயன்படுத்தும் வகையில் பல்வேறு பொருட்களாக தாயாரித்து அன்பளிப்பாக வழங்க உள்ளனர்.

## காரைக்குடி அழகப்பா கலைக்கல்லூரியில் மகளிர் தின கொண்டாட்டம்

காரைக்குடி மார்ச்.12

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரியில்

சர்வதேச மகளிர் தின விழா சிறப்பாக நடைபெற்றது. அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற சிறப்புக் கருத்தரங்கிற்கு கல்லூரியின் முதல்வர் முனைவர் பெத்தாலெட்சுமி தலைமை உரையாற்றினார். மாணவிகளுக்கு மகளிர் தின வாழ்த்துக்களைத் தெரிவித்தார். வேதியியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர் கஸ்தூரிபாய் வரவேற்புரை ஆற்றினார். விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞரும் பவர் மீடியா நெட்வொர்க் தலைவருமான முனைவர் ஜெகன், பெண்களுக்கு உரிமைகள் தானாக கிடைத்துவிடவில்லை என்றும் போராடித் தான் பெண்ணுரிமைகள் கிடைக்கப்பெற்றன என்றும், இன்று சமூகத்தில் நடைபெறும் ஐந்து வகையான பெண்களுக்கு எதிரான குற்றங்களான குழந்தை திருமணம், வரதட்சணை கொடுமை, பெண் சிசுக்கொலை, பணியிடங்களில் நடைபெறும் பெண்களுக்கு எதிரான அநீதி,





பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை ஆகியவற்றைப் பற்றி விளக்கி கூறியதோடு பெண்கள் பாதுகாப்புக்காக தமிழக அரசு இயற்றி வரும் சிறப்பான நடவடிக்கைகள் குறித்தும், புதிய சட்டங்கள் குறித்தும் விளக்கிக் கூறினார். மேலும் சமூக வலைதளத்தை பயன்படுத்தும் மாணவிகள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் தனது சிறப்புரையில் எடுத்துரைத்தார்.

பள்ளத்தூர் அரசு மருத்துவ மனையில் பணியாற்றி பணி நிறைவு பெற்ற மருத்துவர் தாமரை வாழ்த்துரை வழங்கினார். விழாவில் வரலாற்றுத் துறைத் தலைவர் முனைவர் நிலோஃபர் பேகம் மாணவிகள் காளிமுத்து, கயல்விழி, கிருத்திகா ,அன்ன பூரணி ஆகியோருக்கு சிங்கப் பெண் விருது வழங்கப்பட்டன. இயற்பியல் துறைத் தலைவர் பேராசிரியர் கவிதா நன்றி கூறினார் இவ்விழாவில் பேராசி ரியர்களும், ஆசிரியரல்லாப் பணியாளர்களும், மாணவி களும் கலந்து கொண்டனர். விழா விற்கான ஏற்பாடுகளை கல்லூரியின் மகளிர் மைய ஒருங்கிணைப்பாளர் முனை வர் கஸ்தூரிபாய் மற்றும் பேராசிரியர்கள் கவிதா, ஜானகி ஆகியோர் செய்திருந்தனர். முனைவர் பாரதிராணி விழாவினைத் தொகுத்து வழங்கினார்.

## காரைக்குடி தனியார் கல்லூரியில் நாட்டு நலப் பணித்திட்ட சிறப்பு முகாம்

காரைக்குடி மார்ச்.12

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே உள்ள கோவிலூர் நாச்சியப்ப சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்ட சிறப்பு முகாம் சங்கந்திடல் கிராமத்தில் நடைபெற்றது. "கிராமப்புற வளர்ச்சி மற்றும் மேம்பாடு" என்பதை மையக்கருத்தாகக் கொண்டு மாணவ, மாணவியர் களப்பணியாற்றினர்.

முகாமை நாட்டு நலப் பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் பா. திருக்குமரன் வரவேற்ப்புரை வழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர் ரெ. சந்திரமோகன் தலைமையுரை வழங்கினார். சங்கந் திடல்



ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர் எல். ஜோஷபின் மற்றும் ஆசிரியர் சிவாஜி வாழ்த்துறை வழங்கினார்கள்.

பின்னர் சு.லெட்சுமணன் நாட்டு நலப்பணித்திட்ட சிறப்பு முகாம் பற்றிய புரிதலை மாணவர்களுக்கு விளக்கினார். அதனை தொடர்ந்து நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் ஆ. நிஜந்தான் நன்றியுரை வழங்கினார். அதன் பின்னர் கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்ட மாணவ, மாணவியர் சுத்தம் செய்தனர்.

## சிவகங்கையில் வானவில் மன்ற கருத்தாளர்களுக்கான பயிற்சி

சிவகங்கை மார்ச் .12

சிவகங்கை மாவட்டத்தில் உள்ள அரசுப்பள்ளிகளில் வானவில் மன்றம் சிறப்பாக செயல்படுத்தும் வகையில் வானவில் மன்ற கருத்தாளர்களுக்கு சிவகங்கை மாவட்ட ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி கூட்டரங்கில் பிப்ரவரி மாத வேலை அறிக்கை சமர்பித்தல் மற்றும் மீளாய்வுக் கூட்டம் நடைபெற்றது. வானவில் மன்ற கருத்தாளர் ஜெனிட்டா வரவேற்றார்.

சிவகங்கை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் பாலுமுத்து வழிகாட்டுதலின்படி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சகாய பிரிட்டோ கூட்டத்தைத் துவக்கி வைத்து கருத்தாளர்களின் அனுபவங்களைக் கேட்டறிந்து ஆலோசனைகளை வழங்கினார்.

தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி அறிவியல் வருடாந்திர நாட்காட்டியினை பள்ளிகளுக்கு வழங்கி வாழ்த்தி





பேசினார். அமைப்புசார் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மாலாவிடம் கருத்தாளர்களின் வேலை அறிக்கையின் நகல் சமர்ப்பிக்கப்பட்டது.

வானவில் மன்ற கருத்தாளர்கள் புஷ்பவள்ளி வேணி சித்ரா ஜோதி அறிவியல் பரிசோதனைகளையும் கணித செயல்பாட்டையும் செய்து காட்டி விளக்கினர். உபகரணங்கள் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டு பயிற்சியில் பயன்படுத்தப்பட்டது. அனைத்து கருத்தாளர்களும் பயிற்சியில் பங்கு பெற்றனர்.

எதிர்காலத் திட்டம் மற்றும் வேலை அறிக்கையின் தொகுப்பும் கருத்தாளர்களிடமிருந்து பெறப்பட்டது. அனைத்து அரசு பள்ளிகளுக்கும் அறிவியல் வருடாந்திர நாட்காட்டிகள் வழங்கப்பட்டன. உலக மகளிர் தினத்தை சிறப்பிக்கும் வகையில் வானவில் மன்றக் கருத்தாளர்கள் அனைவருக்கும் புத்தகங்கள் நினைவுப் பரிசாக வழங்கப்பட்டது. வானவில் மன்றக் கருத்தாளர்கள் பிரின்சி தீபா தனலெட்சுமி மகளிர் தின சிறப்பு செய்தியினை வழங்கினர். வானவில் மன்றக் கருத்தாளர் பாண்டிச்செல்வி நன்றி கூறினார்.

## அரசனூர் கிராமத்தில் உலக மகளிர் தினமகளிர் சபை கூட்டம்

அரசனூர் மார்ச் .12

சிவகங்கை மாவட்டம் அரசனூர் கிராமத்தில் உலக மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிர் சபை கூட்டம் அரசனூர் சமுதாயக்கூடத்தில் நடைபெற்றது. முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் செல்வராணி தலைமை வகித்தார். சிவகங்கை ஊராட்சி ஒன்றிய வட்டார ஊராட்சி அலுவலர் அருள்பிரகாசம் முன்னிலை வகித்தார். சிறப்பு விருந்தினர்களாக NIRD மாநில தர கண்காணிப்பாளர் பன்னீர்செல்வம்,DRCP மாவட்ட ஊராட்சிகளின் வளமைய அலுவலர் மணிபாரதி ராஜா மற்றும் 27 மகளிர் குழுவைச் சேர்ந்த மகளிர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

மகளிர் காண சிறப்பு சட்ட அமைப்புகள் மற்றும் பாதுகாப்பு குறித்து பிரிஸ்ட் சட்டப் பல்கலைக்கழகம் மதுரை கிளையைச் சேர்ந்த பெண் வழக்கறிஞர் விரிவான விளக்க உரையை நிகழ்த்தினார்.





பெண்களுக்கான மருத்துவ திட்டங்கள் குறித்து அரசனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை சேர்ந்த மருத்துவ அலுவலர் விரிவாக எடுத்துரைத்தார். ழிநிளி மூலம் தியான முறைகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. இ சேவை மையங்கள் குறித்து ஷிஃபா எடுத்துரைத்தார். இறுதியாக அரசனூர் ஊராட்சி செயலாளர் மரிய தாஸ் நன்றி உரை கூறினார்..

## நாச்சியப்ப சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரியில் மகளிர் தின கொண்டாட்டம்

கோவிலூர் மார்ச்.12

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே உள்ள கோவிலூர் நாச்சியப்ப சுவாமிகள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் உலக மகளிர் தின விழா 08.03.2025 அன்று கொண்டாடப்பட்டது. ஸ்ரீ ல ஸ்ரீ நாராயண தேசிக சுவாமிகள் ஆசியுரை வழங்கினார். கோவிலூர் மடாலயக் கல்விக் குழுமத்தின் தாளாளர் மா. வீரப்பன் தலைமையுரை ஆற்றினார். துணை முதல்வர் சீதாலெட்சுமி முன்னிலை வகித்தார். உலகத் தமிழ்ப் பேரியக்கம் தமிழால் இணைவோம் நிறுவனர் சத்திய நாராயணராஜ் பாலகுரு கல்விப் பணியில் சிறந்து விளங்கிய பெண்களுக்கு உலகத் தமிழால் இணைவோம் இயக்கத்தின் சார்பாக "தங்க மங்கை" விருது வழங்கிச் சிறப்புரையாற்றினார்.

ஜெயங்கொண்டான், அரசு உயர்நிலைப்பள்ளியின் தமிழாசிரியர் முனைவர்





நெ.கிருஷ்ணவேணி, முனைவர் முருகேஸ்வரி ஆகியோரும் சொற்பொழிவு ஆற்றினர்.

முன்னதாக, கல்லூரி முதல்வர் முனைவர் ரெ. சந்திரமோகன் வரவேற்புரை வழங்கினார்.

விழாவின் நிறைவாக, உதவிப்பேராசிரியர் முனைவர் மு. பழனியம்மாள் நன்றியுரை நல்கினார். விழாவில் தமிழ்த் துறை மாணவர்கள் பிற துறை மாணவர்கள், மற்றும் துறை தலைவர்கள் பேராசிரியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தமிழால் இணைவோம் கூட்டு மாவட்ட ஆளுநர்கள் முனைவர் கோபால் சுப்பிரமணியன், காசி ஸ்ரீ காளைராசன், . ராஜேஸ்வரி, வென்னிலா காமராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். மகளிரின் தமிழ்ப்பணியைப் பாராட்டி முனைவர் மெ. வள்ளியம்மை, முனைவர் கா. கலா, முனைவர் இரா. கீதா, முனைவர் மா.ரெத்தினேஸ்வரி, முனைவர் ச. சேது கல்பனா, முனைவர் நெ.கிருஷ்ணவேணி, முனைவர் மு. பழனியம்மாள், முனைவர் கு. அனுசுயாதேவி , முனைவர் லெ. தீபா, பேரா.ச. ராஜமீனாட்சி ,பேரா. அ.ரம்யா ஆகியோருக்கு விருது வழங்கப்பட்டது .

## திருப்பூர் நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் மேற்பார்வையில் புதிய பாலம் அமைக்கும் பணி தீவிரம்



திருப்பூர். மார்ச் 11

திருப்பூர் நெடுஞ்சாலை வடக்கு. உட்கோட்டத்திற்கு உட்பட்ட மாநில நெடுஞ்சாலையான திருப்பூர் காங்கயம் பகுதியில் ,நல்லூர் நால்ரோடு சந்திப்பு அருகில் , பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கைக்கு இணங்க. மேற்படி இப்பகுதியில் போக்குவரத்து அதிகமாக உள்ளதால். வாகனங்களில் நெரிசல்கள் ஏற்படுகிறது.

மேலும், மழைக்காலங்களில், மழை நீர், மற்றும் கழிவு நீர், சாலை ஓடுதளத்தில் தேங்குவதால் மழை நீர் தேங்காத வண்ண மாக அப்பகுதியில் சிறு பாலம் அமைக்கும் பணி துரித வேகத்தில் நடைபெற்று வருகிறது இந்தப் பாலம் 4.8 கிலோமீட்டர் வரை அமைக்கப்படுகிறது மக்களின் பயன்பாட்டிற்கு மிக விரைவாக கோட்ட பொறியாளர் விஜய குமார் மற்றும் இளநிலை பொறியாளர் ராஜேஷ் இவர்கள் மேற்பார்வையில் மிக வேகமாக பணி நடந்து கொண்டு வருகிறது இதற்கு பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் இப்பணியை தந்த அரசுக்கும் அதிகாரிகளுக்கும் மக்கள் நன்றி தெரிவித்து பாராட்டினர்.





தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் 72 வது பிறந்தநாள் விழாவையொட்டி சிவகங்கை சட்டமன்ற தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி சார்பாக தாய் இல்லத்தில் ஆதரவற்ற குழந்தைகளுக்கு உணவு வழங்கப்பட்டது சிவகங்கை திமுக நகர் கழகச் செயலாளர் நகர் மன்ற தலைவர் சிஎம். துரை ஆனந்த் உணவு வழங்கி துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் நகர் மன்ற உறுப்பினர்கள் வீனஸ் ராமநாதன்,வீரகாளை மற்றும் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் வாடிவாசல் முத்துவேல்செல்வம், சிவகங்கை சட்டமன்ற தொகுதி அமைப்பாளர்கள் சதிஸ்குமார், செங்கோல், வடக்கு ஒன்றிய அமைப்பாளர் அம்பலம், சிவகங்கை நகர அமைப்பாளர் கார்த்திகேயன் ஆகியோர் கலந்து கொன்டு சிறப்பித்தனர்.

## ராமநாதபுரம் கடலாடி வட்டம் சமத்துவபுரத்தில் பெண்கள் தினத்தை முன்னிட்டு விளையாட்டு போட்டி நடத்திய வேளாண் கல்லூரி மாணவிகள்

ராமநாதபுரம், மார்ச்.12





ராமநாதபுரம் மாவட்டம் கடலாடி வட்டம்சமத்துவபுரத்தில் நம்மாழ்வார் வேளாண்மை கல்லூரி மாணவிகள் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் அகில உலக பெண்கள் தினத்தை முன்னிட்டு மாணவமாணவியருக்கு பல்வேறு போட்டிகள் நடத்தினர்.

விழாவின் தொடக்கத்தில் ஆசிரியர் முத்து தொடக்கவுரை கொடுத்தார் பின்னர் தலைமையாசிரியர் தமிழரசி பெண்களின் பாதுகாப்பு மற்றும் மகளிர் தினத்தை பற்றி எடுத்துரைத்தார்.

மாணவ மாணவிகளுக்கு பல்வேறு போட்டிகள் நடத்தப் பட்டது. மாணவ மாணவிகளின் பெற்றோர்களுக்கும் போட்டிகள் நடத்தப்பட்டது, அனைவரும் உற்சாகதோடு கலந்து கொண்டனர். இதைத் தொடர்ந்து பெண் கல்வி மற்றும் பெண்களின் முன்னேற்றத்தை பற்றி மாணவிகள் உரையாடினர். விழாவின் இறுதியில் மாணவ மாணவிகள் மற்றும் அவர்களின் பெற்றோர் அனைவருக்கும் பரிசுகள் மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டன.

## காட்பாடியில் டெல்லி முரளிதரன் பிறந்தநாள் விழா முன்னிட்டு பெங்களூர் ராஜேஷ் தலைமையில் அன்னதானம் - நலத்திட்ட விழா

வேலூர் மார்ச் .12





வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, கிருஸ்ட்டியான்பேட்டை, கிருஸ்துவ பள்ளி வளாக மைதானத்தில், காட்பாடியை சேர்ந்த டெல்லி. முரளிதரனின் பிறந்தநாளான மார்ச் 8 ஆம் தேதி டெல்லி எம்.முரளிதரன் மற்றும் அவர்களின் அம்மாவின் பிறந்தநாளும், இருவரின் பிறந்தநாளும் ஒரே தேதியான சிறப்புமிகு இனிய நன்னாளான, இவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, அன்னதானம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, கர்நாடகா மாநிலம், பெங்களூரை சேர்ந்த சமூக சேவகர் அமைப்பின் தலைவர் ராஜேஷ் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் ராஜேஷ் குழுவினர் ஜெயகுமார், நம்பிக்கைராஜ், பரத் மற்றும் சமூக ஆர்வலர் குழுவினர் களுடன், கிருஷ்டியான்பேட்டை பகுதி மக்களுக்கு சுமார் 200 நபர்களுக்கு உணவுப் பொருட்கள், புடவைகள், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நோட்டுப் புத்தகங்கள், பள்ளி புத்தகப்பை மற்றும் மரக்கன்றுகள் வழங்கி, இவ்விழாவை விமெர்சையாக சிறப்பித்தனர்.

## அதிகாலையில் கடும் குளிர் நீலகிரியில் பயணிகள் மற்றும் உள்ளூர் வாசிகள் அவதி



குன்னூர், மார்ச் .12

மலை மாவட்டமான நீலகிரியில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் முதல் இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் வரை கடும் உறைபனி தாக்கம் இருந்து வந்தது.இதில் கலந்து சில நாட்களாக உறை பனி தாக்கம் குறைந்துள்ளது.

இருப்பினும் பகல் நேரத்தில் சமவெளிக்கு இணையாககடும் வெயில் சுட்டெரித்து வருகிறது. இதேபோல் அதிகாலை நேரங்களில் கடும் குளிரும் ஏற்படுவதால் உள்ளூர்வாசிகள், ஆட்டோ மற்றும் சுற்றுலா வாகன ஓட்டுனர்கள், சுற்றுலா பயணிகள் அதிகாலை நேரங்களில்பெரும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். இதன் காரணமாக உடலை சூடேற்றிக் கொள்ள தீ மூட்டி குளிர் காய்ந்து வருகின்றனர்.இரவு பகல் என நீலகிரி மாவட்டத்தில் சீதோசன நிலை மாறி வருவதால் சளி, இருமல், காய்ச்சல் உள்ளிட்ட சரும நோய்களால் உள்ளூர் வாசிகள் பெரும் பாதிப்படைந்து வருகின்றனர்.

## நீலகிரி மாவட்ட ஊராட்சி பகுதிகளில் அனுமதி பெறாத கட்டிடங்களுக்கு சீல்! ஆட்சியர் நடவடிக்கை

நீலகிரி மார்ச் .12




நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஊராட்சிகளில் கடந்த 5 ஆண்டுகளில் இருந்த ஊராட்சி தலைவர்கள் அனுமதி இல்லாமல் வீடுகள் மற்றும் கடைகள் வனிக வளாகங்கள் கட்ட பல லட்சங்களை பெற்றுக்கொண்டு பணிகளை தொடர வாய்மொழி உத்தரவு பிறப்பித்தனர். இதனால் பலர் கட்டுமான பணிகளை தொடர்ந்தனர் தற்போது காட்சி மாறியது பணம் வாங்கிகொண்டு வாய்மொழி உத்தரவு வழங்கிய ஊராட்சி தலைவர்கள் பதவி முடிந்து வீட்டுக்கு சென்றுவிட்டனர் தற்போது உள்ள நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் பழைய பைலை தூசி தட்டியதால் அனுமதி பெறாமல் கட்டப்பட்ட கட்டிடங்களை கண்டு பிடித்து அதிகாரிகள் மூன்று நோட்டீஸ் வழங்கி உள்ளனர் நேற்று முதல் அனுமதி பெறாத. வீடுகள் வணிக வளாகங்கன் கடைகள் காட்டேஜ்களுக்கு சீல் வைக்கும் பணி துவங்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது .

## மாடம்பாக்கம் சீரடி சாய் நகர் பகுதியில் திறந்தவெளி கிணறு ஒப்படைக்கும் விழா

மாடம்பாக்கம் மார்ச். 12

தாம்பரம் மாநகராட்சியில் மண்டலம் . 5, வார்டு .69.ல், மாடம்பாக்கம் சீரடி சாய் நகர் பகுதியில் சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட் நிறுவனம் மற்றும் எக்ஸ்னோரா நிறுவனம் இணைந்து புதுப்பிக்கப்பட்ட திறந்தவெளி கிணற்றை பொதுமக்களுக்கு நிலத்தடி நீர் சேகரிக்கும் ஆதாரப்புள்ளியாக, முதன் முதலாக சிறப்புநுட்பங்களுடன், வடிவமைக்கப்பட்ட அப்பகுதிவாழ் மக்களிடம் ஒப்ப டைக்கும் விழா நடைபெற்றது

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ் ஆர் ராஜா கலந்துகொண்டு திறந்தவெளி கிணறு மற்றும் கல்வெட்டை திறந்து வைத்தார் பின்னர் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ் ஆர் ராஜா பேசுகையில் சீரடி சாய் நகர் பகுதியில் நீர் சேமிப்பு,நிலத்தடி நீர் ஆதாரம் பெருக, அடுத்த தலைமுறையினர் மீது தொலைநோக்குடன் பெரும் அக்கறை கொண்டு சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட் நிறுவனம் மற்றும் எக்ஸ்னோரா நிறுவனத்துடன் இணைந்து சீரடி சாய் குடியிருப்போர் நலவாழ்வு சங்கத்தால் புதுப்பிக்கப்பட்ட கிணறு. இந்த கிணற்றை மீட்டெடுக்க சீரடி சாய் நகர் நலவாழ்வு சங்கத்தினர் மேற்கொண்ட முயற்சி மிகவும் பாராட்டுக்குரியது.





கார்ப்பரேட் நிறுவனத்துடன் உள்ளாட்சி நிர்வாகம், சுற்றுச்சூழல் அமைப்புகள் இணைந்து சுற்றுச்சூழல் சிக்கல்களை, வருங்கால நீர்த்தேவைகளுக்கு பாதுகாப்பு அரணாய் விளங்க மேற்கொண்ட இந்த பணியானது, மற்ற அனைவருக்கும் சிறந்த முன்மாதிரியாக, அமையும் எனவும், தாம்பரத்திலேயே சீரடி சாய் நகரானது, இது போன்ற செயல்பாடுகளால் முன்னோடி நகராக அமையும் என்று சிறப்பித்தும், நீர் மேலாண்மையின் மூலம் நீர் பாதுகாப்பின் முக்கியத்துவத் தையும் கூறி தன் சிறப்பு உரையை வழங்கினார்.

உடன் 5வது மண்டல குழு தலைவர் எஸ்.இந்திரன், சோழா நிறுவன குழுமத்தின் CSR மூத்த தலைவர், ரிச்சா சிங், 69வது மாமன்ற உறுப்பினர் வாட்டர் ராஜ், எக்ஸ்னோரா இன்டர்நேஷனல் பவுண்டேஷன் தலைவர் செந்தூர் பாரி, எக்ஸ்னோரா பொருளாளர் சுப்பிரமணி, அறங்காவலர் மோகன சுந்தரம், தாம்பரம் பகுதி நிர்வாகி சீதாராமன், , சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட் நிறுவனத்தின் நிர்வாகிகள் எக்ஸ்னோரா நிர்வாகிகள், மவுண்ட் கார்மல் சர்ச் அருட்தந்தை ரேமண்ட், தாம்பரம் வாழ் நலச்சங்கங் களின் கூட்டமைப்பு, சீரடி சாய் குடியிருப்போர் நலவாழ்வு சங்கம் நிர்வாகிகள், சமூக ஆர்வலர்கள், அருகமை நலச் சங்க பிரதிநிதிகள், சீரடி சாய் நகர்வாசிகள், குழந்தைகள், மற்றும் பொது மக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித் தனர். சீரடி சாய் குடியிருப்போர் நலவாழ்வு சங்கத்தின் சார்பில் மீட்பன் வரவேற்புரையும், பூபாலன் நன்றியுரையும் வழங்கினர். எக்ஸ்னோரா சார்பில் சுப்ரமணியன் நன்றி

## பழனியில் பெண்ணை கொலை செய்தவர்மீது குண்டர் தடுப்புச் சட்டம் பாய்ந்தது

பழனி மார்ச்.12



பழனியில் பெண்ணை கத்தியால் குத்தி கொலை செய்த வழக்கில் கைது செய்யப்பட்ட நபர் மீது மாவட்ட ஆட்சியரின் உத்தரவின் பேரில் குண்டர் தடுப்புச் சட்டம் பாய்ந்தது.

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் கடந்த பிப்ரவரி 11ம்தேதி தைப்பூச தினத்தன்று, அடிவாரம் பகுதியில் உள்ள தனியார் தங்கும் விடுதி ஒன்றில் வேலை பார்த்து வந்த சாந்தி என்ற பெண் கொடூரமான முறையில் கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்டார். கொலை செய்துவிட்டு தப்பி ஓடிய பாலசமுத்திரம் பகுதியைச் சேர்ந்த ஆனந்தகுமார் என்பவரை பழனி அடிவாரம் போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர். இந்நிலையில் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் சரவணன் உத்தரவின் பேரில் மாவட்ட கண்காணிப்பாளர் பிரதீப் வலியுறுத்தலின்படி. காவல் துணை கண்காணிப்பாளர் தனஜெயன் காவல் ஆய்வாளர் மணிமாறன் தீவிர முயற்சியில் ஆனந்தக்குமார் மீது 1982தமிழ்நாடு சட்டம் 14 பிரிவு 2(f) கீழ் இன்று குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கூடுதல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.





சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே தீத்தான் பேட்டை .கட்டிகுளம் செல்லும் ஊரக சாலைகள் பல வருடங்களாக பராமரிப்பு இன்றி சாலை மிகவும் மோசமான நிலையில் காணப்படுகிறது இப்பகுதியில் பணியும் மேற்கொள்ளவில்லை புதிய சாலையும் அமைக்கவில்லை என்று குற்றச்சாட்டு எழுந்துள்ளது. புதிய தார் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

## சேது பாஸ்கரா வேளாண் கல்லூரியில் சர்வதேச மகளிர் தின விழா

காரைக்குடி மார்ச். 12






சிவகங்கை மாவட்டம் காரைக்குடி சேது பாஸ்கரா வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் சர்வதேச மகளிர் தின விழா (மார்ச்.8) அன்று விமர்சையாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக காரைக்குடி தெற்கு குற்றப் பிரிவு காவல் ஆய்வாளர் ஃபிரான்வின் டானி மற்றும் டிராஃபிக் காவல் சிறப்பு துணை ஆய்வாளர் எஸ்.கலா கலந்து கொண்டு அங்கிருந்த மகளிர் மாணவிகள், பேராசிரியர்கள் மற்றும் ஊழியர்களுக்கு ஊக்கமளிக்கும் விதமாக உரையாற்றினர்.

இந்நிகழ்வில் தாளாளர் முனைவர் சேது குமணன், கல்லூரி முதல்வர்(பொறுப்பு) முனைவர் மா. விஷ்ணுப்ரியா மற்றும் செயலாளர் எல். கந்தப்பழம் ஆகியோரின் வழிகாட்டுதலின்படி விமர்சியாக நடைப்பெற்றது. முனைவர் மா. விஷ்ணுப்ரியா வரவேற்புரை வழங்க விழா இனிதே துவங்கியது. பெண்களின் முக்கியத்துவம், அவர்களின் உரிமைகள், மற்றும் சமூக முன்னேற்றத்தில் பெண்கள் அடையும் சாதனைகள் குறித்து பேசப்பட்டதோடு, பட்டிமன்றம், நடனம் முதலிய சிறப்பு கலை நிகழ்ச்சிகளுடன் இவ்விழா மாணவிகள் மற்றும் ஆசிரியர்களின் உற்சாகத்துடன் நிறைவு பெற்றது.

விழாவின் மற்றொரு சிறப்பம்சமாக புலிகுத்தியில் நூறு மரக்கன்றுகள் நடப்பட்டது. சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு SBAC - RF நிறுவனத்தின் பெண் பணியாளர்கள் சிறப்பான சமூகப் பணியில் ஈடுபட்டனர். இயற்கையை பாதுகாக்கும் நோக்கில், புலிகுத்தி பகுதியில் 100 மரக்கன்றுகள் நடவு செய்யும் நிகழ்வு நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில், நிறுவனத்தின் பல்வேறு நிலைகளில் பணிபுரியும் பெண்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு, சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு தங்களின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தினர். மரக்கன்று களை நடுவது சுற்றுச்சூழல் சமநிலையை பாதுகாக்க உதவுவதோடு, எதிர்கால சந்ததிக்கு சுத்தமான காற்றையும், ஆரோக்கியமான வாழ்வையும் வழங்கும் என்பதை அவர்கள் வலியுறுத்தினர்.

இந்த வகையான சமூக பொறுப்பு நடவடிக்கைகள், பெண்களின் செயல்பாடுகளை ஊக்குவிப்பதுடன், பசுமை பாதுகாப்பிற்கும் நல்ல முன்னுதாரணமாக அமைகின்றன. நிகழ்ச்சியை கல்லூரி நிர்வாகம், மாணவர்கள், மற்றும் ஆசிரியர்கள் இணைந்து சிறப் பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

# வேலூர் கே.வி.குப்பம் மோர்தனா கால்வாயில் தூர்வாரும் பணிக்கு அடிக்கல் நாட்டு விழா




வேலூர், மார்ச்.12

வேலூர் மாவட்டம், குடியாத்தம் மற்றும் கி.வ.குப்பம் தாலுகாவில் உள்ள மோர்தானா இடது பிரதான கால்வாய் தூர்வாரம் பணிக்கு ரூ.2.50 கோடி மதிப்பீட்டில், தூர்வாரி புனரமைக்கும் பணிக்கு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அடிக்கல் நாட்டி பணியை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, சட்டமன்ற உறுப்பினர்கள், மேல்பாலாறு வடிநில வட்ட கண்காணிப்பு பொறியாளர் ஆர்.ரமேஷ் குடியாத்தம் வருவாய் கோட்டாட்சியர் செல்வி சுபலட்சுமி, மேல்பாலாறு வடிநில வட்ட செயற்பொறியாளர் பிரபாகர், அரசு துறை சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள், மக்கள் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.




வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக, காயிதே மில்லத் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, பொதுமக்களிடமிருந்து 476 மனுக்களை பெற்று சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழக்கம்போல் வழங்கி நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மாலதி, துணை ஆட்சியர் (பயிற்சி) ஜி. ரவிக்குமார், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் நீ. செந்தில்குமரன், உதவி ஆணையர் (கலால்) முருகன், வேலூர் வருவாய் கோட்டாட்சியர் செல்வி விஷ்ணுபிரியா, மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர் எஸ்.ஆர்.என். மதுசெழியன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அலுவலர் சீதா மற்றும் அனைத்து துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம் மாங்குளம் ஊராட்சி மீனாட்சிபுரம் நியாய விலை கடையை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி மூர்த்தி பொதுமக்கள் பயன்பாட்டுக்கு திறந்து வைத்து வைத்தார் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) மோனிகா ரானா, சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் , கூட்டுறவுமண்டல இணைப்பதிவாளர் சதீஷ்குமார் ,வருவாய் கோட்டாட்சியர் சங்கீதா ஆகியோர் உடன் உள்ளனர்




மதுரை மாநகராட்சி மண்டலம் 5 (மேற்கு) அலுவலகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாமில் பொதுமக்களிடமிருந்து மனுக்களை மேயர் இந்திராணி பொன்வசந்த் பெற்றுக் கொண்டார் அருகில் துணை மேயர் நாகராஜன் , மண்டலத் தலைவர் சுவிதா , உதவி ஆணையாளர் பார்த்தசாரதி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.






சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே உள்ள ஆணைக்குளம் கிராமத்தில் உலக மகளிர் தினத்தை முன்னிட்டு வீரத்தாய் குயிலி பெண்கள் முன்னேற்ற அறக்கட்டளை சார்பில் பள்ளி குழந்தைகளுக்கு இலவச நோட்டு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. பெண்கள் எவ்வாறு பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதை பற்றியும் விழிப்புணர்வு நிகழ்ச்சியின் ஏற்பாடுகளை வீரத்தாய் குயிலி பெண்கள் முன்னேற்ற அறக்கட்டளை நிறுவனர் ஆ. குயிலிஅய்யனார் தலைமையில் செய்திருந்தனர்இந்த நிகழ்ச்சியில் வீரத்தாய் குயிலி வம்சாவளிகள் வீ.கரிசல்,சு. கணேசன், நா.முத்தையா, கூத்தாண்டன் பால்பாண்டி, நெல்கட்டும் செவல் ஒண்டிவீரன் வாரிசுதார் ஒண்டிவீரன் ஆறுமுகம், முறம்பு வீ. லட்சுமணப்பெருமாள், ஆனைகுளம் வீ. ஈஸ்வரன், ஒண்டிவீரன் அ.கண்ணன் மற்றும் ஏராளமான பெண்கள் பள்ளியில் பயிலும் மாணவிகள்



சிவகங்கை மாவட்டம் காரைக்குடி கோவிலூர் நாச்சியப்ப சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரியின் இரண்டாம் நாள் நாட்டு நலப்பணித்திட்ட சிறப்பு முகாம் சங்கந்திடல் கிராமத்தில் நடைபெற்றது. “வாக்கின் முக்கியத்துவமும் வாக்காளர் விழிப்புணர்வும்” என்பதை மையக்கருத்தாகக் கொண்டு மாணவ, மாணவியர் களப்பணியாற்றினர். முகாம் நிகழ்வில் நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் பா. திருக்குமரன் வரவேற்புரை வழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர் ரெ.சந்திரமோகன் தலைமையுரை வழங்கினார். கோவிலூர் ஆண்டவர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியின் முதல்வர் மணிமொழிமோகன் சிறப்புரை ஆற்றினார். அதனை தொடர்ந்து நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் ஆ. நிஜந்தன் நன்றியுரை வழங்கினார். அதன் பின்னர் கிராமத்திலுள்ள அருள்மிகு பள்ளிகொண்டக் காளியம்மன் திருக்கோவிலில் கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்ட மாணவ, மாணவியர் சுத்தம் செய்தனர்.



வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், வேலூர் மாவட்டத்தில் 36 வழித்தடங்களில் மினி பேருந்து இயக்குவதற்கு பெறப்பட்ட விண்ணப்பங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்ட வழித்தடங்களுக்கான விண்ணப்பத்தாரரை தேர்வு செய்ய, மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி முன்னிலையில், குலுக்கல் முறை ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வின்போது வேலூர் வட்டார போக்குவரத்து அலுவலர் சுந்தரராஜன், துறை சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் விண்ணப்பதாரர்கள் என பலர் உடனிருந்தார்.

# பெரியகுளத்தில் வட்ட சட்டப்பணிகள் சார்பில் 159 வழக்குகளுக்கு தீர்வு




பெரியகுளம் மார்ச்12

தேனி மாவட்டம் பெரியகுளம் வட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு சார்பில் பெரியகுளம் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் தேசிய மக்கள் நீதிமன்றம் நடைபெற்றது. இதில் பெரியகுளம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதிகள் சமீனா, சந்திரசேகரன், சார்பு நீதிபதி நீதித்துறை நடுவர் கமலநாதன் பெரியகுளம் வழக்கறிஞர் சங்க தலைவர் பாலாஜி, செயலாளர் நாராயணசாமி, மற்றும் மூத்த வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர். இதில் உரிமை யியல் வழக்குகள், காசோலை வழக்குகள், மோட்டார் வாகன விபத்து வழக்குகள் உள்பட மொத்தம் 159 வழக்குகளுக்கு ரூபாய் 1, 43, 18,500/ தீர்வு காணப்பட்டது. இந்த தேசிய மக்கள் நீதிமன்ற ஏற்பாடுகளை பெரியகுளம் வட்ட சட்டப் பணிகள் குழு பணியாளர்கள் செய்திருந்தனர்.

# எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் தமிழ்ப்பேராயம் ஒருங்கிணைக்கும் சொல் தமிழா சொல் 2025

நெல்லை, மார்ச்.12

எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் தமிழ்ப்பேராயம், எஸ்.ஆர்.எம். கல்வி நிறுவனர் வேந்தர் டாக்டர் தா. இரா. பாரிவேந்தர் 2010 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை தமிழ்ப்பேராயம் தலைசிறந்த எண்ணற்ற தமிழ்ப்பணிகளை ஆற்றிவருகிறது. தமிழ் அருட்சுனைஞர் சான்றிதழ்ப் படிப்பு, வள்ளலார் சான்றிதழ்ப் படிப்பு முதலானவற்றோடு பல இலட்சம் மதிப்பிலான தமிழ்ப்பேராய விருதுகள் வழங்குதல், அரிய நூல்களை வெளியிடுதல், பன்னாட்டு, தேசிய மாநாடுகளை ஒருங்கிணைத்தல் எனப்பல்வேறு சிறந்த பணிகளை ஆற்றிவருகிறது. தமிழ்ப்பேராயம் வழி மாணவர்களின் ஆற்றலை வெளிப்படுத்த பல ஆயிரம் மாணவர்களைக் கொண்ட பாரிவேந்தர் மாணவர் தமிழ் மன்றம் செயல்பட்டு வருகிறது.




அரும்பணிகள் பல ஆற்றி வரும் தமிழ்ப்பேராயம் இதன் தொடர்ச்சியாக கல்லூரி மாணவர்களுக்கான பேச்சாற்றலை அங்கீகரிக்கும் நோக்கத்தில் சொல் தமிழா சொல் 2025 என்னும் தலைப்பில் மிகப் பிரம்மாண்டமான பேச்சுப் போட்டியைத் தற்போது ஏற்பாடு செய்து நடத்திவருகிறது. தமிழகம் மற்றும் புதுச்சேரியை உள்ளடக்கி 9 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு இப் பேச்சுப்போட்டி பல்வேறு கல்லூரிகளில் திட்டமிடபடி நடைபெற்று வருகிறது.

7வது மண்டலத்திற்கான பேச்சுப் போட்டி நெல்லை சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரியில் நடைபெற்றது. இதில் 350க்கும் மேற்பட்ட மாணவர்கள், 6 நடுவர்கள் என மிகப்பிரம்மாண்டமாக நெல்லை மண்டலப் போட்டி நடைபெற்றது.

பல சுற்றுகளாக நடைபெற்ற இப்போட்டிகளில் வெற்றிபெற்றவர்கள் விபரம் பின்வருமாறு:

முதல் பரிசு ம.செ. அமல் சாதிய்யா, வியாசா கலை மற்றும் அறிவியல் பெண்கள் கல்லூரி தென்காசி, 1,00,000 ரூபாய் இரண்டாம் பரிசு அ.ரா. லாவண்யா, அரசு சட்டக் கல்லூரி திருநெல்வேலி 75,000 ரூபாய் மூன்றாம் பரிசு மா. கா. இராஜவேல், சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி திருநெல்வேலி, 50,000 ரூபாய் இப்போட்டியில் வெற்றிபெற்றோருக்குச் சான்றிதழ்களை கரு. நாகராசன், தலைவர், தமிழ்ப்பேராயம் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார். வெற்றியாளர்கள் மாநில அளவிலான இறுதிப்போட்டியில் பங்கேற்கத் தகுதிபெறுவர்.

போட்டிகளில் வென்றோருக்கான பரிசுத்தொகை மாநில அளவிலான இறுதிப்போட்டி அன்று வழங்கப்படும்.

# பல்லாவரம் வேல்ஸ் பல்கழகழத்தில் சர்வேதேச உலக மகளிர் தினத்தை முன்னிட்டு சிறந்து பெண் சாதனையாளர்கள் விருந்து வழங்கும் விழா

பல்லாவரம் மார்ச் 12

சென்னை பல்லாவரத்தில் உள்ள வேல்ஸ் பல்கழகழத்தில் சர்வேதேச உலக மகளிர் தினத்தை முன்னிட்டு பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கம் பெண் சாதனையாளர்களை ஊக்குவிக்கும் வகையில் வேல்ஸ் பல்கழகத்தின் நிறுவன தலைவர் ஐசரி கணேஷ் ,துணை தலைவர் பிரீத்தி கணேஷ்,




புதுமை மற்றும் தொழில் நுட்பத்தில் சிறந்து விழங்கும் இஸ்ரோ விஞ்ஞானி ஷாஜி ஆதித்யா எல்.1, காவல் துறை தலைவர் உறுப்பினர் மற்றும் செயலாளர் தமிழ்நாடு சீருடை பணியாளர்கள் ஆட்சேர்ப்பு வாரியம் ராஜேஸ்வரி ஐ.பி.எஸ்., விளையாட்டில் சிறந்து விழங்கியதற்காக உலக கேரம் சாம்பியன் காசிமா, ஊடக துறையில் சிறந்து விளங்குவதற்காக நடிகை மற்றும் தயாரிப்பாளரான குஷ்பு,

தொழில் முனையில் சிறந்து விள்ங்குபவர் எவர்க்ரோத் அகடாமியின் நிறுவனர் மாலிகா ரவிகுமார் ஆகியோர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரிக்கப்பட்டது, தொடர்ந்து உலகேரம் சேம்பியன் காசிமா வேல்ஸ் பல்கலைக்கழத்தில் இலவசமாக படிக்கலாம் என்று கூறிய ஐசரி கணேஷ் ஊக்கதொகையாக பத்து லட்சம் ரூபாய் சாசோலையை வழங்கினார், பின்பு பேசிய உலக கேரம் சாம்பியன் காசிமா, தனது தந்தையை ஏராளமானவர்கள் ஏளனமாக பேசி வந்ததாகவும் இதனால் என் தந்தை கூறிய படி நான் உலக காரம் சாம்பியன் வென்றுள்ளதாகவும் இப்பொழுது ஏளனமாக பேசியவர்கள் தனது தந்தைக்கு எழுந்து நின்று வணக்கம் வைப்பதாகவும் நான் பிறந்ததில் இருந்து வாடகை விட்டில் தான் வசித்து வந்தோம் தற்போது புதிதாக வீடு வாங்கி தனது தந்தைக்கு வழங்கியது பெருமையாக இருப்பதாக கண்ணீருடன் தெரிவித்தார் இதை கேட்ட அவரின் தந்தையும் கண்கலங்கினார்,

தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த நடிகை பெண்களுக்கு எதிராக வன்கொடுமைகள்,பாலியல் தொல்லைகள் நடக்கும் போது கட்சி ரீதியாக பேச வேண்டாம் என் தம்பியான விஜய் அவர்களுக்கு கூறிகொள்கிறேன், பெண்களுக்கு பாலியல் தொல்லை அல்லது வன்கொடுமைகள் நடக்கும் போது நம்ம வீட்டின் பெண்ணிற்க்கு நடப்பதாக தான் பார்க்க வேண்டும் இது இவர்கள் ஆட்சியில் நடந்தது அவர்கள் அட்சியில் நடந்தது என்று பார்க்காமல் ஒட்டுமொத்தமாக என்ன செய்ய வேண்டும் வீட்டில் குழந்தைகளை எப்படி வளர்க்க முடியும் என்பதை சொல்லி கொடுக்க வேண்டும் என்பதை தவிர அரசியலாக்க கூடாது என்றார்.

இது போன்ற.ஆடைகள் கூடாது,அந்த நேரத்தில் போக கூடாது என நாம் பெண்களை கூறி வரும் நிலையில் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகும் ஐந்து வயது சிறுமி முதல் 80 வயது மூதாட்டி வரை எந்த மாதிரியான ஆடை அணிய வேண்ட என்பது தெரியவில்லை,

நான் அரசியல் பேச விரும்பவில்லை நான் எதை பேசினாலும் திமுகவிற்க்கு எதிராக வரும் சூழல் உள்ளது, மாதா பிதா அதற்க்கு பிறகு தெய்வம் என்று கூறுவார்கள் ஆனால் தெய்வமே பாலியல் வன்கொடுமைகளில் ஈடுபடுவதால் யாரை நம்புவது என்று தெரியவில்லை. பள்ளிகளுக்கு தங்களில் குழந்தை அனுப்பி பிறகு பெற்றோர்கள் பயத்துடன் இருப்பதாகவும் தெரிவித்தார்.